March 2019 Reg. No. ...................................... **FY 20**

Name ..........................................

## Part - III

## TAMIL (OPTIONAL)

Maximum : 80 Scores

Time : 2½ Hours

Cool off time : 15 Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool off time' to get familiar with questions and to plan your answers.
- Read the instructions carefully.
- Read the questions carefully before answering.
- Calculations, figures and graphs should be shown in the answer sheet itself.
- Give equations wherever necessary.
- Electronic devices except nonprogrammable calculators are not allowed in the Examination Hall.

**பொதுவான விதிமுறைகள் :**

- வினாத்தாள் எழுதுவதற்கான நேரத்தைத்தவிர 15 நிமிடங்கள் அதிகமாக தரப்பட்டுள்ளது.
- அந்த 15 நிமிடங்களில் வினாக்களை புரிந்து கொண்டு, விடைகளை எழுதுவதற்கு திட்டமிடுவதற்காக உபயோகிக்கவும்.
- விடை எழுவதற்கு முன்னால் வினாக்களை கவனமாக படிக்கவும்.
- விடையளிக்குமாறு அறிவுறுத்தப்பட்ட வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்கவும்.
- வரைபடங்கள், படங்கள் மற்றும் கணக்கீடுகள் யாவும் விடைத்தாளிலேயே காண்பிக்கப்பட வேண்டும்.
- தேவையான இடங்களில் சமன்பாடுகள் கொடுக்கவும்.
- நிரல் படுத்தப்படாத கால்குலேட்டர்கள் தவிர மற்ற எந்த மின்னணு சாதனங்களும் தேர்வு எழுதும் ஹாலுக்குள் அனுமதிக்கப் படமாட்டாது.

**1 முதல் 5 வரையுள்ள வினாக்களின் விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக. மதிப்பெண் 1 வீதம்.** **5 × 1 = 5**

**1.** ஒரு சொல் அதன் பொருளைக் குறிப்பதோடு அதன் கண் காண முடியாத அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளைக் குறிப்பது.............

(அ) குறியீடு (ஆ) உணர்ச்சி

(இ) கற்பனை (ஈ) உவமை

**2.** தரப்பட்டுள்ள வாக்கியத்தில் பயனிலைச் சொற்கள் எவை? என்னிடம் இரண்டு பழங்கள் இருந்தன. அவற்றுள் ஒன்றை என் தம்பியிடம் கொடுத்தேன்.

(அ) இரண்டு; பழங்கள் (ஆ) என்னிடம்; இரண்டு

(இ) இருந்தன; கொடுத்தேன் (ஈ) என் தம்பியிடம்

**3.** இரண்டு சொற்கள் அடுக்கி வந்தும் பிரித்தால் பொருள் தராதது

(அ) அடுக்குத்தொடர் (ஆ) இரட்டைக்கிளவி

(இ) பெயரெச்சம் (ஈ) வினையெச்சம்

**4.** "களையெடுக்கும் பெரிய குளம் கணக்கெழுதும் ஆலமரம்" ... இவ்வரிகளில் "களை" என்பதன் இரு பொருள்

(அ) நெற்பயிர்; தூய்மை

(ஆ) ஆர்வம்; ஒருவகை மரம்

(இ) வெறுப்பு; கோடைப்பயிர்

(ஈ) களைப்பு; பயிர்களிடையே வளரும் செடி

**5.** ஒரெழுத்து ஒரு மொழி என்பது

(அ) ஒரு எழுத்து மட்டும் வந்து பொருள் தருவது

(ஆ) இரண்டு எழுத்துகள் வருவது

(இ) பொருள் இல்லாத ஒரு எழுத்து வருவது

(ஈ) மூன்று எழுத்துகள் வந்து பொருள் தருவது

**6 முதல் 9 வரை எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. மதிப்பெண் 2 வீதம்.** **4 × 2 = 8**

**6.** பின்வரும் சொற்களுள் பண்புப் பெயர்ச் சொற்களை மட்டும் எடுத்து எழுதுக

வெப்பம்; மரம்; இரக்கம்; மலை; வெண்மை; குழந்தை; பசுமை; ஆடை

**7.** தரப்பட்டுள்ள மரபுத்தொடர்களுள் ஏதேனும் இரண்டினைப் பொருள் எழுதி விளக்குக.

அ) கொடி கட்டிப் பறத்தல்

ஆ) வயிற்றிலடித்தல்

இ) செவி மடுத்தல்

**8.** ஹைக்கூ கவிதையின் தனித் தன்மைகளுள் இரண்டினை எழுதுக.

"குன்றின் வழிகாட்டி
கண்டுகொள்வதேயில்லை - எங்
கெங்கோ செரிமலர்கள்" – ஹைகூ

**9.** இணையம் தொடர்பான ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களை எடுத்து எழுதுக.

Debit card ; Chatting ; Cyber crime ; Web dictionary

(இணைய அகராதி; அரட்டை; இணையக்குற்றம்; கடன் அட்டை)

**10, 11 வினாக்களுக்கு விடை எழுதுக. மதிப்பெண் 3 வீதம். $2 \times 3 = 6$**

**10.** தரப்பட்டுள்ள தொடர் வாக்கியங்களைத் தனி வாக்கியமாக எழுதவும்.

1) என்னிடம் பத்து புத்தகங்கள் இருந்தன. அவற்றை என் நண்பனுக்குக் கொடுத்தேன்.

2) பெருமழை பெய்ததால் வெளியே செல்ல இயலாது இருந்தும் நாங்கள் சிற்றுந்தில் புறப்பட்டோம்.

3) அவன் காலையில் எழுந்தான் குளித்தான் பள்ளிக்கூடம் சென்றான்.

**11.** பின்வரும் நூல்களுள் அற நூல்களை மட்டும் எடுத்து எழுதுக.

இன்னிலை; முல்லைப்பாட்டு; ஏலாதி; மதுரைக்காஞ்சி; ஆசாரக்கோவை

**12 முதல் 15 வரையுள்ள வினாக்களில் எவையேனும் மூன்றிற்கு விடை எழுதுக. மதிப்பெண் 5 வீதம். $3 \times 5 = 15$**

**12.** ஏதேனும் இரண்டு பழமொழிகளை விளக்கி விளக்கக் குறிப்பு எழுதுக.

1) சிறு துரும்பும் பல்குத்த உதவும்

2) பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்

3) நிழலருமை வெயிலிலே

**13.** வழக்குச் சொற்களைத் தூய தமிழில் எழுதுக.

"பட்டண வாசம் எனக்கு ஒத்துக்காது

கொஞ்ச நாளாகவே அம்மாவுக்கு உடம்பு

சரியில்லாம இருந்திருக்கு. பார்வையும்

இல்ல. முந்தா நாள் கிணற்றடியில்

வழுக்கி விளுந்துட்டார். அவளுக்கு

கிராமத்திலேந்து போகவும் மனமில்ல"

**14.** தரப்பட்டுள்ள பகுதியைப் பயன்படுத்தி "தங்க மீன்கள்" கதைமாந்தரான கல்யாணியின் பண்பு நலன்களை எழுதுக.

"செல்லம்மாவின் சின்ன சின்னத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் வாழ்வின் முழுமையை உணர்கிறான். வெள்ளிப் பூச்சுடன் சில்வர் மேனாக மகளிடம் கதை பேசியபடியே சைக்கிளில் ஊருலா வருகிறான்"

**15.** கீழே தரப்பட்டுள்ள பாடல் பகுதியை விமர்சனம் செய்க

"நாடுகளும்
எல்லைகளும் இல்லை
பறவைகளின் சுதந்திரம்
நம்மிடம் இல்லை"

**16 முதல் 21 வரையுள்ள வினாக்களில் எவையேனும் ஐந்திற்கு விடை எழுதுக. மதிப்பெண் 6 வீதம்.** **5 × 6 = 30**

**16.** பின்வரும் குறிப்புகளின் துணை கொண்டு தோல் பாவைக் கூத்துப் படத் தயாரிப்பு குறித்து விளக்கக் குறிப்பு எழுதவும்.

(குறிப்பு: ஆட்டுத் தோல் - கரித்துண்டு - படங்கள் வரைதல் - ஓலைப் பெட்டியில் பாதுகாத்தல்)

**17.** பின்வரும் பாடல் பகுதியிலிருந்து ஏதேனும் ஆறு சொற்களைத் தேர்வு செய்து அகர வரிசைப் படுத்தவும்.

"இரு பெரு வேந்தரொடு வேளிர் சாயப்
பொருது அவரைச் செருவென்றும்
இலங்கு அருவிய வரை நீந்தி
கரம் போழ்ந்த இகல் ஆற்றல்
உயர்ந்து ஓங்கிய விழுச் சிறப்பின்
நிலம் தந்த பேர் உதவி
பொலந்தார் மார்பின் நெடியோன்"

**18.** மரபுக் கவிதை, புதுக் கவிதை, ஹைக்கூ இவற்றிற்கிடையே உள்ள வேறுபாடுகளை விளக்கிச் சிறு கட்டுரை எழுதுக.

**19.** பள்ளிக் கூட இலக்கிய மன்றத்தில் "பாவைக் கூத்து" என்ற தலைப்பில் பேசுவதற்கான சொற்பொழிவுக் குறிப்பு எழுதுக.

(குறிப்பு: பாவுரா - கருவி - தோல்பாவைகளை இயக்குதல்)

**20.** பின்வரும் பாடலை நயம் பாராட்டி எழுதுக.

"தனிமைச் சுவையுள்ள சொல்லை - எங்கள்

தமிழினும் வேறெங்கும் யாங்கண்டதில்லை!

நனியுண்டு நனியுண்டு காதல் - தமிழ்

நாட்டினர் யாவர்க்குமே தமிழ் மீதில்"

(குறிப்பு: ஓசை நயம், சொல் நயம், பொருள் சிறப்பு)

**21.** வலைத்தளங்களைச் சரியாகப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளை எடுத்துரைத்துப் பெட்டிச் செய்தி தயாரிக்கவும்.

**22 முதல் 24 வரையுள்ள வினாக்களில் எவையேனும் இரண்டிற்கு விடை எழுதுக. மதிப்பெண் எட்டு வீதம்.** **2 × 8 = 16**

**22.** நாட்டுப்புறப் பாடல்களின் தனித்தன்மைகளைக் குறிப்பிட்டுச் சிறுகட்டுரை எழுதுக.

(குறிப்பு: பாடல் வகைகள் - பண்பாடு - பழமொழிகள் விடுகதைகள்)

**23.** இணையக் குற்றங்களும் மாணவர்களும் எனும் தலைப்பில் பள்ளிக்கூட ஆண்டு மலரில் வெளியிடுவதற்கான கட்டுரை தயாரிக்கவும். குறிப்புகளைப் பயன்படுத்தவும்.

(குறிப்பு: விளம்பரங்கள் - பணமோசடி போல்வன)

**24.** ஓவிய மொழியிலிருந்து எழுத்து மொழிக்கு என்ற தலைப்பில் இலக்கிய மன்றத்தின் உரையாற்றுவதற்கான சொற்பொழிவு தயாரிக்க.

(குறிப்பு: ஓவிய மொழி - சைகைகள் - வட்டெழுத்துக்கள் - பேச்சுமொழி - இலக்கியமொழி)